### மாம்பலம் இரயில் நிலையத்திலிருந்து தியாகராயர் நகர் பேருந்து நிலையம் வரை

# நகரும் படிக்கட்டு - மின்தூக்கிகளுடன் கூடிய ஆகாய நடைபாதை!

## மக்களின் பயன்பாட்டிற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, மே.17–

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.5.2023) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் சென்னை, தியாகராயர் நகர் பேருந்து நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாம்பலம் இரயில் நிலைய நடைமேம்பாலத்திலிருந்து இரயில்வே மார்க்கெட் சாலை, மேட்லி சாலை வழியாக தியாகராயர் நகர் பேருந்து நிலையம் வரை 28 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள நகரும் படிக்கட்டு மற்றும் மின்தூக்கிகளுடன் கூடிய ஆகாய நடைமேம்பாலத்தை மக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

தியாகராயர் நகர் பகுதி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளான ரங்கநாதன் தெரு, மேட்லி சாலை, மார்க்கெட் சாலை, நடேசன் தெரு ஆகிய இடங்களில் பாதசாரிகளின் போக்குவரத்து நெரிசலை போக்கும் வகையிலும், இரயில் மற்றும் பேருந்துப் பயணிகள் சிரமமின்றி இரயில் மற்றும் பேருந்து நிலையத்தை அடைந்திட இந்த ஆகாய நடைமேம்பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

மாம்பலம் இரயில் நிலைய நடைமேம்பாலத்தை தியாகராயர் நகர் பேருந்து நிலையத்துடன் இணைக்கும் வகையிலும், மாம்பலம் இரயில் நிலைய நடைமேம்பாலத்திலிருந்து இரயில்வே மார்க்கெட் சாலை, மேட்லி சாலை வழியாக தியாகராயர் நகர் பேருந்து நிலையம் வரை சீர்மிகு நகர திட்ட நிதியின் கீழ், 28 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில், 7 மீட்டர் உயரத்தில், 570 மீட்டர் நீளம் மற்றும் 4.20 மீட்டர் அகலத்தில் நகரும் படிக்கட்டு மற்றும் மின் தூக்கிகளுடன் கூடிய ஆகாய நடைமேம்பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

> “இந்த ஆகாய நடைமேம்பாலமானது பல் வகை போக்குவரத்தினை ஒருங்கிணைக்கும் வகையில், தென் தமிழகத்திலிருந்து வரும் இரயில் பயணிகள் மற்றும் மின்சார தொடர் வண்டியில் பயணிக்கும் பயணிகள் சிரமமின்றி தியாகராயர் நகர் பேருந்து நிலையத்தை அடையும் வண்ணம், மாம்பலம் இரயில் நிலைய நடைமேம்பாலத்துடன் இந்த ஆகாய நடைமேம்பாலம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.”

இந்த ஆகாய நடைமேம்பாலமானது பல் வகை போக்குவரத்தினை ஒருங்கிணைக்கும் வகையில், தென் தமிழகத்திலிருந்து வரும் இரயில் பயணிகள் மற்றும் மின்சாரா தொடர்வண்டியில் பயணிக்கும் பயணிகள் சிரமமின்றி தியாகராயர் நகர் பேருந்து நிலையத்தை அடையும் வண்ணம், மாம்பலம் இரயில் நிலைய நடைமேம்பாலத்துடன் இந்த ஆகாய நடைமேம்பாலம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆகாய நடைமேம்பாலத்தில் மின்னாக்கிகள் (Generators), காவல்துறை கண்காணிப்பு அறையுடன் இணைக்கப்பட்ட சிசிடிவி கேமராக்கள், பொதுமக்களுக்கான அறிவிப்பு ஒலிபெருக்கிகள், துருப்பிடிக்காத எஃகிலான குப்பை கூடைகள், பாதுகாவலர் அறைகள், நவீன கழிவறைகள் போன்ற கூடுதல் வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆகாய நடைமேம்பாலத்தை தினமும் சுமார் ஒரு இலட்சம் மக்கள் பயனடைவர்.

தியாகராயர் நகரில் ஆகாய நடைமேம்பாலத்தை திறந்து வைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அந்நடைமேம்பாலம் முழுவதும் நடந்து சென்றார். பின்னர், நடைமேம்பாலத்திலிருந்து இறங்கி ரங்கநாதன் தெரு முழுவதும் நடந்து சென்று இரு மருங்கிலும் கூடியிருந்த பொதுமக்களின் உற்சாக வரவேற்பினை ஏற்றுக் கொண்டு, அவர்கள் அளித்த கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு, பொதுமக்களுடன் செல்பி புகைப்படங்களும் எடுத்துக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் த. வேலு, ஜெ. கருணாநிதி, துணை மேயர் மு.மகேஷ் குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு, வரி விதிப்பு மற்றும் நிதி குழுத் தலைவர் திருமதி சர்ப்ஜெயா தாஸ் நரேந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டில் - ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் உள்பட

# 16 மாவட்டங்களுக்கு ஆட்சியர்கள் பணியிட மாற்றம்!

## தமிழ்நாடு அரசு உத்தரவு!

சென்னை,மே.17- தமிழ்நாட்டில் 16 மாவட்டங்களுக்கு ஆட்சியர்களை மாற்றம் செய்து அரசு உத்தரவிட்டுள்ளது. இதேபோல் பல்வேறு துறைகளுக்கு ஐ.ஏ.எஸ்., அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியராக இருக்கும் அருண் தம்புராஜ் கடலூர் மாவட்டத்துக்கும், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியராக இருக்கும் தீபக் ஜேக்கப் தஞ்சாவூர் மாவட்டத்துக்கும், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ராகுல் நாத் தூத்துக்குடி மாவட்டத்துக்கும், ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் ஜானி டாம் வர்கீஸ் நாகப்பட்டினம் மாவட்டத்துக்கும் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல், அரியலூர் மாவட்ட ஆட்சியராக ஆனி மேரி ஸ்வர்ணாவும், புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியராக மெர்ஸி ரம்யாவும், நாமக்கல் மாவட்ட ஆட்சியராக எஸ்.உமாவும், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியராக கலைச்செல்வி மோகனும், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியராக கமல் கிஷோரும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மதுரை ஆட்சியராக எஸ்.சங்கீதாவும், சிவகங்கை மாவட்ட ஆட்சியராக ஆஷா அஜித்தும், ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியராக விஷ்ணு சந்திரனும், திருப்பூர் மாவட்ட ஆட்சியராக கிறிஸ்துராஜூம், ஈரோடு மாவட்ட ஆட்சியராக ராஜ கோபால் சுங்காராவும், திண்டுக்கல் மாவட்ட ஆட்சியராக பூங்கொடியும், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியராக சரயு நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

கவிதா ராமு ஐ.ஏ.எஸ்., சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்துக்கும், பாலசுப்பிரமணியம் ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் செயலாளராகவும், கிருஷ்ணன் உன்னி ஐ.ஏ.எஸ்., நிதித்துறையின் இணைச்செயலாளராகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதேபோல், பல்வேறு துறைகளுக்கு ஐ.ஏ.எஸ்., அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

### துரைமுருகன் - ஐ.பெரியசாமி - க.பொன்முடி - ஆ.இராசா - கனிமொழி கருணாநிதி - உதயநிதி ஸ்டாலின் பங்கேற்பு!

# தொ.மு.ச. பேரவை பொன்விழா மாநாடு: முதல்வர் மு.க.ஸ்டாலின் நாளை சிறப்புரை!

## மு.சண்முகம் எம்.பி. அறிக்கை!

சென்னை, மே 17 - தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை எல்.பி.எப்.யின் பொதுக்குழு நேற்று (16.5.2023) தொடங்கியது. தொடர்ந்து 17, 18 ஆகிய தேதிகளில் பொன்விழா மாநாடு சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெறுகிறது. மாநாட்டினை யொட்டி, 18 ஆம் தேதி பேரணி நடைபெறுகிறது. பேரவை பொன்விழா மாநாட்டில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்புரை யாற்றுகிறார்கள்.

இந்நிகழ்ச்சி குறித்து தொ.மு.ச. பொதுச் செயலாளர் மு.சண்முகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தொ.மு.ச.பேரவை பொன் விழா மாநாடு - 25-வது பொதுக்குழு நேற்று (16.5.2023) தொடங்கியது.

தொடர்ந்து 17, 18 ஆகிய தேதிகளில் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெறுகிறது.

16-5-2023 காலை 9 மணிக்கு கொடியேற்றல், காலை 10 மணிக்கு ஐ.என்.டி.யு.சி., ஏ.ஐ.டி.யு.சி, எம்.எச்.எஸ்., சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யு.சி., டி.யு.சி.சி., ஏ.ஐ.சி.சி.டி.யு., எம்.எல்.எப்., எல்.எல்.எப்., பி.எஸ்.ஐ. ஆகிய தொழிற்சங்கத் தலைவர்கள் உரையாற்றினர்.

பிற்பகல் 2 மணிக்கு கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. பொதுக்குழுவை தொடங்கி வைத்து உரையாற்றினார்.

பேரவை பொதுச்செயலாளர் மு.சண்முகம் எம்.பி. ஆண்டறிக்கையை தாக்கல் செய்தார். பொருளாளர் கி.நடராசன் வரவு - செலவு கணக்கு தாக்கல் செய்தார்.

**கருத்தரங்கம்!**

மாலை 5 மணிக்கு நடைபெறும் கருத்தரங்கத்தில் “சமூக நீதி” என்ற தலைப்பில் திருச்சி சிவா எம்.பி., ‘ஜனநாயகம்’ என்ற தலைப்பில் திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு, ‘தொழில் வளர்ச்சி’ என்ற தலைப்பில் சி.மகேந்திரன் (சி.பி.ஐ.), ‘தொழிலாளர் நலன்’ என்ற தலைப்பில் சு.வெங்கடேசன் எம்.பி. (சி.பி.ஐ.) ஆகியோர் பேசினர்.

**இரண்டாம் நாள் நிகழ்ச்சி**

17-5-2023 புதன்கிழமை காலை 10 மணிக்கு குழுக்களின் விவாதம் நடைபெறுகிறது. மாலை 4 மணிக்கு தீர்மானங்கள் பொதுக்குழுவில் வைத்து ஒப்புதல் பெறப்படுகிறது.

**மூன்றாம் நாள் நிகழ்ச்சி**

18-5-2023 வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும் வாழ்த்தரங்கத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர்கள் - அமைச்சர் ஐ.பெரியசாமி, அமைச்சர் க.பொன்முடி, கனிமொழி கருணாநிதி எம்.பி., அந்தியூர் ப.செல்வராஜ் எம்.பி., கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, மா.சுப்பிரமணியன் மற்றும் நே.சிற்றரசு, மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தயாநிதிமாறன் எம்.பி., மற்றும் அமைச்சர் பெருமக்கள், கழக முன்னோடிகள் பேசுகின்றனர்.

மாலை 4 மணிக்கு சுவாமி சிவானந்தா சாலையில் அணி வகுத்து நடைபெறும் மாபெரும் பேரணியை கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு தொடங்கி வைக்கிறார்.

இரவு 7 மணிக்கு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விழா பேருரையாற்றுகிறார். மேலும் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன், கழகப்பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

தொ.மு.ச. பொருளாளர் கி.நடராசன் நன்றியுரையாற்றுகிறார்.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

## தலைமைக் கழக அறிவிப்பு

சென்னை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த தலைமைக் கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து, மீண்டும் கழகப் பணியாற்ற அனுமதிக்குமாறு கழகத் தலைவர் அவர்களிடம் வைத்தகோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முத ல்கழக உறுப்பினராகச் செயல்படஅனுமதிக் கப்பட்டுள்ளார்.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை - 600 018.
நாள் : 16-5-2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



செங்கல்பட்டு மாவட்டத்தில் கள்ளச்சாராயம் அருந்தி உயிரிழந்த 3 நபர்களின் குடும்பங்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.10 இலட்சத்திற்கான காசோலைகளை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆ.ர.ராகுல் நாத், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் வரலட்சுமி மதுசூதனன், மு.பாபு, நகரச் செயலாளர் நரேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் அன்புச்செல்வன் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில்

# தேசிய டெங்கு தடுப்பு தினம் விழிப்புணர்வு நிகழ்ச்சி!

சென்னை, மே 17-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நேற்று (16.05.2023) சென்னை பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநரகத்தில் நடைபெற்ற தேசிய டெங்கு தினம் 2023 விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:

தமிழக அரசு எல்லா காலங்களிலும் முன்னெச்சரிக்கையுடன் செயல்படுகின்ற காரணத்தினால் எந்தவிதமான காய்ச்சல், வயிற்றுப்போக்கு மற்றும் தொற்றுநோய்கள் பரவாமல் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்படி தமிழக அரசு சுகாதாரத்துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் போன்ற பல்வேறு துறைகளுடன் ஒருங்கிணைந்து கொசு ஒழிப்பு, விழிப்புணர்வு ஏற்படுத்துதல், காய்ச்சல் கண்டறிதல், காய்ச்சல் கண்ட இடங்களில் உடனடி தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல், மருத்துவ முகாம்கள் நடத்துதல் போன்ற தொடர் நடவடிக்கைகள் காரணமாக தமிழகத்தில் தொற்று நோய்கள் முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த மாதங்களில் ஏற்பட்ட காய்ச்சல் நிகழ்வுகள் குறிப்பாக இன்புளுயன்சா மற்றும் கொரோனா போன்ற நோய்கள் இந்தியாவில் மற்ற பகுதிகளில் அதிகளவில் நிகழ்ந்த போதிலும் தமிழக அரசால் உடனடியாக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் காரணமாக இந்த நோய்களின் பாதிப்பு தமிழகத்தில் தற்போது முழுமையாக கட்டுப்பட்டுத் தப்பட்டுள்ளது. இந்த ஆண்டும் காய்ச்சல் குறிப்பாக டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க அத்தகைய தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தும் வகையிலும், டெங்கு காய்ச்சல் குறித்து மேலும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும் நாடு முழுவதும் தேசிய டெங்கு தடுப்பு தினம் நேற்று 16.05.2023 கடைபிடிக்கப்பட்டது.

தமிழகமெங்கும் தினமும் காய்ச்சல் கண்காணிப்பு பணி 2800 அரசு மருத்துவமனைகள் மற்றும் குறிப்பிட்ட தனியார் மருத்துவமனைகளில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அவ்வாறு பெறப்படும் காய்ச்சல் நிலவரத்தை கொண்டு அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆரம்ப சுகாதார மருத்துவ அலுவலர் தலைமையில் வட்டார அளவிலான துரித செயல்பாட்டுக் குழுக்கள் காய்ச்சல் ஏற்பட்ட பகுதிகளுக்குச் சென்று உடனடியாக நோய்த் தடுப்பு பணிகளை மேற்கொள்கிறது. காய்ச்சல் பாதிக்கப்பட்ட இடங்களில் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, நடமாடும் மருத்துவ குழுக்கள் காய்ச்சல் பாதிக்கப்பட்ட இடங்களுக்கே சென்று உடனடி சிகிச்சை அளித்து வருகின்றன. இதுவரை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு மருத்துவமுகாம்கள் 10.03.2023 லிருந்து இன்று வரை 80197 முகாம்கள் நடத்தப்பட்டு அதில் 13,68,601 பயனாளிகள் பயன்பெற்று 14,197 பேருக்கு காய்ச்சல் கண்டறியப்பட்டு குணமடைந்து நலமுடன் உள்ளனர். அனைத்து மாவட்டங்களிலும் தற்காலிக பணியாளர்கள் ஏறக்குறைய 22,000 பேர் வீடு வீடாக சென்று கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அழிக்கும் பணி மற்றும் புகை மருந்து அடிக்கும் பணிகளும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கொசு உற்பத்தியை தடுக்க தேவையான உபகரணங்கள் மற்றும் மருந்துகள் போதிய அளவில் இருப்பில் உள்ளது. இப்பணிகள் அனைத்து துறை அலுவலர்களாலும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

தினந்தோறும் கொசு உற்பத்தியாகும் இடங்கள் பற்றி ஊராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி பகுதிகளில் கண்டறிந்து பூச்சியியல் ஆய்வு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் 24 x 7 மணி நேர காய்ச்சல் சிகிச்சை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் டெங்குக் காய்ச்சலுக்கு சிகிச்சை அளிக்க தேவையான இரத்த அணுக்கள், பரிசோதனை கருவிகள், மருந்துகள், இரத்தக்கூறுகள் மற்றும் இரத்தம் ஆகியவை போதிய அளவில் இருப்பில் வைக்கப்பட்டுள்ளது. “எலிசா” முறையில் டெங்குக் காய்ச்சலை கண்டுபிடிக்க பரிசோதனை மையங்கள் 125ஆக தற்பொது உயர்த்தப்பட்டுள்ளது. அன்றாடம் “ihip.nhp.gov.in/idsp” இணையவழியாக, காய்ச்சல் பாதிப்புகள் பதிவேற்றப்பட்டு அவை உடனுக்குடன் சிகிச்சை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒரு குறிப்பிட்ட இடங்களில் அதிக அளவிலான காய்ச்சல் இது வரை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின் பேரில் இந்திய மருத்துவ முறை பாரம்பரிய மருந்துகளான நிலவேம்பு குடிநீர், பப்பாளி இலைச்சாறு மற்றும் மலைவேம்பு இலைச்சாறு போன்றவை அரசு மருத்துவமனைகளில் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் குறும்படம் மற்றும் விளம்பரங்கள் வெளியீடு மூலம் கொசு உற்பத்தியை தடுப்பதற்கான மக்களின் பங்கு குறித்தும், காய்ச்சல் பற்றிய சிகிச்சைகள் குறித்தும் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நிகழ்ச்சியில் டெங்கு காய்ச்சலை உண்டாக்கும் ஏடிஸ் கொசுபுழுக்கள் வளரும் அசாதாரணமான இடங்களை பல்வேறு நிலைகள் குறித்த நிழற்படங்கள் கண்காட்சி மக்கள் பயன்பாட்டிற்கு வைக்கப்பட்டுள்ளது. அதே போல் கொசுக்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த கொசு மருந்துகளான டெக்னிக்கல் மாலத்தியான் மற்றும் பைரித்திரம் போன்ற மருந்துகளுக்கு அவை எவ்வாறு கட்டுப்படுத்தப்படுகிறது என்பதை பராட்கேஜ் கொசுக்களின் பரிசோதனை மூலம் கொசுக்களை மருந்துகளுக்கு உட்படுத்தி அதன் இறப்பு விகிதம் 1 மணி முதல் 24 மணிவரை தீர்மானிக்கப்பட்டு கொசுக்களைக் கட்டுப்படுத்தும் முதிர் கொசு மருந்துகளின் பயன் நிர்மாணிக்கப்படுகிறது. இதற்காக இன்று 10 இடங்களில் பராட்கேஜ் பரிசோதனை செய்முறை நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் காய்ச்சல் மற்றும் டெங்குக் காய்ச்சல் குறித்த அனைத்து சிகிச்சை முறைகள் பற்றியும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும், ஏடிஸ் கொசுக்கள் உற்பத்தியினை தடுக்க ஏற்கனவே பல்வேறு துறைகள் மூலம் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்ந்து தீவிரமாக நடைபெற விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. சென்ற ஆண்டை போலவே இந்த ஆண்டும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு டெங்கு காய்ச்சல் முழுமையாக கட்டுப்படுத்தவும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. டெங்கு தடுப்பு நடவடிக்கைக்கான சுமார் 21,000 களப்பணியாளர்கள் (Domestic Breeting Checkers) வீடு வீடாகச் சென்று கொசு ஒழிப்பு பணிகள் செய்து வருகின்றனர். இப்பணிகளை செவ்வனே செய்ய பெரிய புகை அடிப்பான்கள் 1158, சிறிய புகை அடிப்பான்கள் 7213, மிக சிறிய புகை அடிப்பான்கள் 7634 மற்றும் டெமிபாஸ், பைரித்திரம், டெக்னிகல் மாலத்தியான் போன்ற ஒழிப்பு மருந்துகள் போதிய அளவு கையிருப்பில் உள்ளது. இந்த தேசிய டெங்கு விழிப்புணர்வு நாள் கூட்டத்தினையொட்டி ஏடிஸ் கொசுக்கள் உற்பத்தியாகும் கண்டறியப்படாத இடங்கள் மற்றும் அவற்றை தடுப்பது குறித்தும் விரிவாக விளக்கும் வகையில் கண்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. டெங்கு காய்ச்சலை கட்டுபடுத்த சிறப்பாக பணியாற்றிய சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் வீடு வீடாகச் சென்று கொசுப்புழுக்கள் அழிக்கும் களப்பணியாளர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

கள்ளச்சாராயம் குடித்து பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்தல்

கள்ளச்சாராயம் குடித்து பாதிக்கப்பட்ட 66 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் 7 பேரும், பாண்டிச்சேரி அரசு மருத்துவமனையில் ஒருவரும், விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 55 பேரும், திண்டிவனம் அரசு மருத்துவமனையில் 2 பேரும், பாண்டிச்சேரி தனியார் மருத்துவமனையில் 2 பேர் என 66 பேர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இறப்புகளை பொறுத்தவரை 13. தமிழ்நாடு முதலமைச்சர் நேரிடையாக சென்று பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறி அவர்களுக்கு தகுந்த சிகிச்சை அளிக்க அறிவுறுத்தியிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் இறந்தவர்களுக்கான குடும்ப உதவித் தொகையும் தரப்பட்டிருக்கிறது. அதன்படி இன்று விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அதிகபட்சம் நபர்கள் அனுமதிக்கப்பட்டு இருப்பதால் அவர்களை நேரில் சென்று சந்தித்து அவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை குறித்து கேட்டறிந்து அனுமதிக்கப்பட்டிருக்கும் 55 பேரும் நலமுடன் சிகிச்சை முடிந்து வீடு திரும்புவதற்கு ஏதுவாக பொறுப்பு அலுவலர் ஒருவரை நியமிக்க உள்ளோம். தமிழ்நாட்டின் முதலமைச்சர்களின் அறிவுறுத்தலின்படி இன்று விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை குறித்து கேட்டறிய உள்ளோம் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

# கலைஞர் நூற்றாண்டுவிழா பொதுக்கூட்ட அரங்கம் -கலைஞர் கோட்டம்!

## அமைச்சர்கள் ஐ.பெரியசாமி - எ.வ.வேலு - டி.ஆர்-பி-ராஜா ஆய்வு!

திருவாரூர்,மே17.

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா நினைவு “கலைஞர் கோட்டம்” அமைப்பு பணிகள் மற்றும் பொதுக்கூட்டம் நடைபெற விருக்கும் மைதானம் ஆகியவற்றை அமைச்சர் பெருமக்கள் ஐ.பெரியசாமி ,எ.வ.வேலு,டிஆர்பிராஜா ஆகியோர் ஆய்வுசெய்து பார்வையிட்டனர். அப்போது மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், முன்னாள் அமைச்சர் தாட்கோ தலைவர் உ.மதிவாணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

தமிழ்நாடு முதல்வர் கழக தலைவர் முக.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் புகழுக்கு மேலும் ஒரு மணிமகுடமாக அமைய விருக்கும் நூற்றாண்டு விழா திருவாரூரில் நடைபெற இருக்கிறது. உலக தரத்தில் திருவாரூர் அருகே காட்டூரில் அமைக்கப்படும் “கலைஞர் கோட்டம்” கட்டுமான பணிகள் தற்போது முழு வீச்சில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு முதல்வர் கழக தலைவர் முக.ஸ்டாலின் அவர்களின் ஆலோசனை களின்படி நடைபெற்று வரும் இந்த பணிகளை தமிழ்நாடு அரசின் ஊரக உள்ளாட்சித் துறை அமைச்சரும் கழக துணை பொதுச்செயலாளருமான ஐ.பெரியசாமி, பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு, தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் பார்வையிட்டனர். அப்போது கலைஞர் நூற்றாண்டு விழா நடைபெறும் பிரமாண்ட மைதானத்தையும் பார்வையிட்டு மாவட்ட செயலாளரும் திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே.கலைவா ணனிடம் ஆலோசனைகளை மேற்கொண்டனர்.

பின்னர் காட்டூரில் அமைந்திருக்கும் கலைஞர் அவர்களின் தாயார் அஞ்சுகத்தம்மையார் நினைவிடத்திற்கு சென்று அம்மையாரின் நினைவிடத்தில் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அப்போது மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி பாலு, பந்தல் சிவா , அவைத்தலைவர் க.தன்ராஜ், ஒன்றிய செயலாளர்கள் ஆர்.பாலச்சந்திரன், சேகர் கலிய பெருமாள், டி.எஸ்.டி. முத்துவேல், நா.கவியரசு , சித்தேறி சிவா, கே.வி. கே.ஆனந்த்,நகர செயலாளர்கள் வீரா.கணேசன், வாரை. எஸ்.பிரகாஷ், மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயாலளர் இரா.சங்கர், வி. ஆர்.என். பன்னீர் , காட்டூர் ஊராட்சிமன்ற தலைவர் விமலா பிரபாகரன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நேற்று (16.05.2023) சென்னை பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநரகத்தில் நடைபெற்ற தேசிய டெங்கு தினம் 2023 விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் எழிலன் நாகநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப்சிங்பேடி, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதிஷ், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் மரு.ச.உமா, பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.சண்முககனி மற்றும் உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்.